
# கோலாலம்பூர் மாநகரைச் சுற்றிலும் 100 மரங்களை வெட்டினால் 100 மரக்கன்றுகளை நடுங்கள்



கோலாலம்பூர், மே 16-

ஆபத்தான மரங்களை அகற்றும் நடவடிக்கையை ஒரு பக்கம் மேற்கொள்ளும்போது அதற்கு ஈடாக புதிய மரங்களை நட வேண்டும் என பிரதமர்டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு 100 மரங்களை வெட்டிச் சாய்க்கின்றபோது அதற்கு பதிலாக 100 மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் கோலாலம்பூரில் கடுமையான புயல்மழையின்போது பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்து உயிர்பலியும் வாகனங்களுக்கு பெருத்தசேதமும் ஏற்பட்டது.

இந்நிலையில் ஆபத்தான மரங்களை அகற்றுமாறு பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆபத்தான மரங்களை களையெடுத்தால் அதற்கு பதிலாக புதிய மரக்கன்றுகளை நடுங்கள் என்று கோலாலம்பூர் மாநகர மன்ற மேயர் கமாருல்ஸமான் மாட் சாலேவுக்கு பிரதமர் ஆணையிட்டிருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜாலான் சுல்தான் இஸ்மாயிலில் ஒரு பெரிய மரம் சாய்ந்து ஒருவர் மாண்டதோடு இருவர் காயமடைந்தனர். ஏராளமான வாகனங்கள் சேதமடைந்தன.

அதேபோல இரண்டு தினங்களுக்கு முன்னர் ஜாலான் பினாங்கில் மரம் சாய்ந்த மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. இதில் மலாக்கா மாநில முதல்வர் அப்துல் ரவுப் யூசோவின் வாகனம் அதிர்ஷ்டவசமாக தப்பியது. யாரும் காயமடையவில்லை.

இந்த இரு சம்பவங்களினால் கோலாலம்பூர் மாநகரில் 28 இடங்களில் ஆபத்தை விளைவிக்கும் வகையில் மரங்கள் இருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக அகற்றுமாறு கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலேஹா முஸ்தபா கேட்டுக் கொண்டிருக்கிறார்.